# thiruththoNDar purANam (periya purANam) panniraNDAm tirumuRai

## (in tamil script, TSCII format)

## சேக்கிழார் அருளிய

# திருத்தொண்டர் புராணம் என்ற பெரிய புராணம்

## பன்னிரண்டாம் திருமுறை

### இரண்டாம் காண்டம்

# 12 மன்னிய சீர்ச் சருக்கம்

---

This page is courtasy of Project Madurai. This thirumuRai is being proof-read. So this current form may have errors in it.

---

periya puranam in tscii format file generated from Koeln version using convertor (two corrections n2 and jn) file yet to be proof/read file edited to be in TSCII 1.7 ENCODING ------------------------------------------------

Periya puranam text



| Chapter No. | Transliterated text | TSCII HTML format | Tamil PDF |
|---|---|---|---|
| 1 | thirumalaic carukkam | திருமலைச் சருக்கம் | PDF |
| 2 | thillaivAzandhaNar carukkam | தில்லைவாழந்தணர் சருக்கம் | PDF |
| 3 | ilaimalintha carukkam | இலைமலிந்த சருக்கம் | PDF |
| 4 | mummaiyAl ulakANDa | மும்மையால் | PDF |

| | | | |
|---|---|---|---|
| | carukkam | உலகாண்ட சருக்கம் | |
| 5 | thiruninRa carukkam | திருநின்ற சருக்கம் | PDF |
| 6 | vambaRA varivaNDu carukkam - thirunyAna cambanthar purANam | வம்பறா வரிவண்டு சருக்கம் - திருஞானசம்பந்தர் புராணம் | PDF |
| | vambaRA varivaNDu carukkam - EyarkOn muthalAya nAyanmArkaL | வம்பறா வரிவண்டு சருக்கம் - ஏயர்கோன் முதலாய நாயன்மார்கள் | PDF |
| 7 | vArkoNDa vanamulaiyAL carukkam | வார்கொண்ட வனமுலையாள் சருக்கம் | PDF |
| 8 | poyyaDimaiyillAtha pulavar carukkam | பொய்யடிமை இல்லாத புலவர் சருக்கம் | PDF |
| 9 | kaRaikkaNDan carukkam | கறைக்கண்டன் சருக்கம் | PDF |
| 10 | kaDal cUzntha carukkam | கடல் சூழ்ந்த சருக்கம் | PDF |
| 11 | paththarAyp paNivAr carukkam | பத்தராய்ப் பணிவார் சருக்கம் | PDF |
| 12 | manniyacIrc carukkam | மன்னியசீர்ச் சருக்கம் | PDF |
| 13 | veLLAnaic carukkam | வெள்ளானைச் சருக்கம் | PDF |


12 மன்னிய சீர்ச் சருக்கம்

65 பூசலார் நாயனார் புராணம்

1. அன்று இனார் புரம் எரித்தார்க்கு ஆலயம் எடுக்க எண்ணி 4171-1
ஒன்றும் அங்கு உதவாது ஆக உணர்வினால் எடுக்கும் தன்மை 4171-2
நன்று என மனத்தினாலே நல்ல ஆயம் தான் செய்த 4171-3
நின்ற ஊர்ப் பூசலார்தம் நினைவினை உரைக்கல் உற்றார் 4171-4

2. உலகினில் ஒழுக்கம் என்றும் உயர் பெரும் தொண்டை நாட்டு 4172-1
நலமிகு சிறப்பின் மிக்க நான் மறை விளங்கும் மூதூர் 4172-2
குல முதல் சீலம் என்றும் குறைவுஇலா மறையோர் கொள்கை 4172-3
நிலவிய செல்வம் மல்கி நிகழ் திருநின்ற ஊராம் 4172-4

3. அருமறை மரபு வாழ அப்பதி வந்து சிந்தை 4173-1
தரும் உணர்வான எல்லாம் தம்பிரான் கழல்மேல் சார 4173-2
வருநெறி மாறா அன்பு வளர்ந்து எழ வளர்ந்து வாய்மைப் 4173-3
பொருள் பெறு வேதநீதிக் கலை உணர் பொலிவின் மிக்கார் 4173-4

4. அடுப்பது சிவன்பால் அன்பர்க்கு ஆம் பணி செய்தல் என்றே 4174-1
கொடுப்பது எவ்வகையும் தேடி அவர் கொளக் கொடுத்தும் கங்கை 4174-2

மடுப்பொதி வேணி ஐயர் மகிழ்ந்து உறைவதற்கு ஓர் கோயில் 4174-3
எடுப்பது மனத்துக் கொண்டார் இரு நிதி இன்மை எண்ணார் 4174-4

5. மனத்தினால் கருதி எங்கும் மாநிதி வருந்தித் தேடி 4175-1
எனைத்தும் ஓர் பொருள் பேறு இன்றி என் செய்கேன் என்று நைவார் 4175-2
நினைப்பினால் எடுக்க நேர்ந்து நிகழ் உறு நிதியம் எல்லாம் 4175-3
தினைத்துணை முதலாத் தேடிச் சிந்தையால் திரட்டிக் கொண்டார் 4175-4

6. சாதனத் தோடு தச்சர் தம்மையும் மனத்தால் தேடி 4176-1
நாதனுக்கு ஆலயம் செய் நலம் பெறு நல் நாள் கொண்டே 4176-2
ஆதரித்து ஆகமத்தால் அடிநிலை பாரித்து அன்பால் 4176-3
காதலில் கங்குல் போதும் கண்படாது எடுக்கல் உற்றார் 4176-4

7. அடிமுதல் உபானம் ஆதி ஆகிய படைகள் எல்லாம் 4177-1
வடிவு உறும் தொழில்கள் முற்ற மனத்தினால் வகுத்து மான 4177-2
முடி உறு சிகரம் தானும் முன்னிய முழத்தில் கொண்டு 4177-3
நெடிது நாள் கூடக் கோயில் நிரம்பிட நினைவால் செய்தார் 4177-4

8. தூபியும் நட்டு மிக்க சுதையும் நல்வினையும் செய்து 4178-1
கூவலும் அமைத்து மாடு கோயில் சூழ் மதிலும் போக்கி 4178-2
வாவியும் தொட்டு மற்றும் வேண்டுவ வகுத்து மன்னும் 4178-3
தாபரம் சிவனுக்கு ஏற்க விதித்த நாள் சாரும் நாளில் 4178-4

9. காடவர் கோமான் கச்சிக் கல்தளி எடுத்து முற்ற 4179-1
மாடு எலாம் சிவனுக்கு ஆகப் பெரும் செல்வம் வகுத்தல் செய்வான் 4179-2
நாடமால் அறியாதாரைத் தாபிக்கும் அந்நாள் முன்னாள் 4179-3
ஏடு அலர் கொன்றை வேய்ந்தார் இரவிடைக் கனவில் எய்தி 4179-4

10. நின்ற ஊர்ப் பூசல் அன்பன் நெடு நாள் நினைந்து செய்த 4180-1
நன்று நீடு ஆலயத்து நாளை நாம் புகுவோம் நீ இங்கு 4180-2
ஒன்றிய செயலை நாளை ஒழிந்து பின் கொள்வாய் என்று 4180-3
கொன்றை வார் சடையார் தொண்டர் கோயில் கொண்டு அருளப் போந்தார் 4180-4

11. தொண்டரை விளக்கத் தூயோன் அருள் செயத் துயிலை நீங்கித் 4181-1
திண்திறல் மன்னன் அந்தத் திருப்பணி செய்தார் தம்மை 4181-2
கண்டு நான் வணங்க வேண்டும் என்று எழும் காதலோடும் 4181-3
தண் தலைச் சூழல் சூழ்ந்த நின்ற ஊர் வந்து சார்ந்தான் 4181-4

12. அப்பதி அணைந்து பூசல் அன்பர் இங்கு அமைத்த கோயில் 4182-1
எப்புடையது என்று அம்கண் எய்தினார் தம்மைக் கேட்கச் 4182-2
செப்பிய பூசல் கோயில் செய்தது ஒன்று இல்லை என்றார் 4182-3
மெய்ப் பெரு மறையோர் எல்லாம் வருக என்று உரைத்தான் வேந்தன் 4182-4

13. பூசுரர் எல்லாம் வந்து புரவலன் தன்னைக் காண 4183-1
மாசு இலாப் புசலார் தாம் யார் என மறையோர் எல்லாம் 4183-2
ஆசு இல் வேதியன் இவ்வூரான் என்று அவர் அழைக்க ஓட்டான் 4183-3
ஈசனார் அன்பர் தம்பால் எய்தினான் வெய்ய வேலான் 4183-4

14. தொண்டரைச் சென்று கண்ட மன்னவன் தொழுது நீர் இங்கு 4184-1
எண் திசை யோரும் ஏத்த எடுத்த ஆலயம் தான் யாது இங்கு 4184-2
அண்டர் நாயகரைத் தாபித்து அருளும் நாள் இன்று என்று உம்மைக் 4184-3
கண்டு அடி பணிய வந்தேன் கண் நுதல் அருள் பெற்று என்றான் 4184-4

15. மன்னவன் உரைப்பக் கேட்ட அன்பர் தாம் மருண்டு நோக்கி 4185-1
என்னை ஓர் பொருளாக் கொண்டே எம்பிரான் அருள் செய்தார் ஏல் 4185-2
முன்வரு நிதி இலாமை மனத்தினால் முயன்ற கோயில் 4185-3
இன்னதாம் என்று சிந்தித்து எடுத்தா வாறு எடுத்துச் சொன்னார் 4185-4

16. அரசனும் அதனைக் கேட்டு அங்கு அதிசயம் எய்தி என்னே 4186-1
புரை அறு சிந்தை அன்பர் பெருமை என்று அவரைப் போற்றி 4186-2
விரை செறி மாலை தாழ நிலமிசை வீழ்ந்து தாழ்ந்து 4186-3
முரசு எறி தானை யோடு மீண்டு தன் மூது ஊர்ப் புக்கான் 4186-4

17. அன்பரும் அமைத்த சிந்தை ஆலயத்து அரனார் தம்மை 4187-1
நன் பெரும் பொழுது சாரத் தாபித்து நலத்தின் ஓடும் 4187-2
பின்பு பூசனைகள் எல்லாம் பெருமையில் பல நாள் பேணிப் 4187-3
பொன் புனை மன்றுள் ஆடும் பொன் கழல் நீழல் புக்கார் 4187-4

18. நீண்ட செம் சடையினார்க்கு நினைப்பினால் கோயில் ஆக்கி 4188-1
பூண்ட அன்பு இடை அறாத பூசலார் பொன்தாள் போற்றி 4188-2
ஆண்ட கை வளவர் கோமான் உலகு உய்ய அளித்த செல்வப் 4188-3
பாண்டிமா தேவியார் தம் பாதங்கள் பரவல் உற்றேன் 4188-4

66 மங்கையர்க்கரசியார் புராணம்
1. மங்கையர்க்குத் தனி அரசி எங்கள் தெய்வம் வளவர் திருக்குலக் கொழுந்து வளைக்கைமானி 4189-1
செம் கமலத் திருமடந்தை கன்னிநாடு ஆள் தென்னர்குலப் பழிதீர்த்த தெய்வப் பாவை 4189-2
எங்கள் பிரான் சண்பையர் கோன் அருளினால் ஏ இருந்தமிழ் நாடு உற்ற இடர் நீக்கித் தங்கள் 4189-3
பொங்கு ஒளி வெண் திரு நீறு பரப்பினார் ஐ போற்றுவார் கழல் எம்மால் போற்றலாமே 4189-4

2. பூ சுரர் சூளா மணி ஆம் புகலி வேந்தர் போனக ஞானம் பொழிந்த புனித வாக்கால் 4190-1
தேசு உடைய பாடல் பெறும் தவத்தினாரைச் செப்புவது யாம் என் அறிந்து தென்னர் கோமான் 4190-2
மாசுஇல் புகழ் நெடுமாறன் தனக்குச் சைவ வழித்துணையாய் நெடும் காலம் மன்னிப் பின்னை 4190-3
ஆசுஇல் நெறி அவரோடும் கூட ஈசர் அடி நிழல் அமர்ந்திருக்க அருளும் பெற்றார் 4190-4

3. வரும் நாள் ஒன்றும் பிழையாத் தெய்வப் பொன்னி வளம் பெருக்க வளவர் குலம் பெருக்கும் தங்கள் 4191-1
திருநாடு போல் செழியர் தென்னர் நாடு சீர் விளக்கும் செய்ய சீறடிகள் போற்றி 4191-2
ஒரு நாளும் தம் செயலில் வழுவாது அன்பர்க்கு உடைகீளும் கோவணமும் நெய்து நல்கும் 4191-3
பெருநாமச் சாலியர் தம் குலத்தில் வந்த பெருந்தகையார் நேசர் திறம் பேசல் உற்றாம் 4191-4

67 நேச நாயனார் புராணம்
1. சீர் வளர் சிறப்பின் மிக்க செயல் முறை ஒழுக்கம் குன்றா 4192-1
நார் வளர் சிந்தை வாய்மை நன்மையார் மன்னி வாழும் 4192-2
பார் வளர் புகழின் மிக்க பழம்பதி மதி தோய் நெற்றிக் 4192-3
கார்வளர் சிகர மாடக் காம்பீலி என்பது ஆகும் 4192-4

2. அந் நகர் அதனில் வாழ்வார் அறுவையர் குலத்து வந்தார் 4193-1
மன்னிய தொழிலில் தங்கள் மரபில் மேம்பாடு பெற்றார் 4193-2

பல்நாக ஆபரணர்க்கு அன்பர் பணி தலைக்கொண்டு பாதம் 4193-3
சென்னியில் கொண்டு போற்றும் தேசினார் நேசர் என்பார் 4193-4

3. ஆங்கு அவர் மனத்தின் செய்கை அரன் அடிப்போதுக்கு ஆக்கி 4194-1
ஓங்கிய வாக்கின் செய்கை உயர்ந்த அஞ்சு எழுத்துக்கு ஆக்கி 4194-2
தாங்கு கைத்தொழிலின் செய்கை தம்பிரான் அடியார்க்கு ஆகப் 4194-3
பாங்கு உடை உடையும் கீளும் பழுதுஇல் கோவணமும் நெய்வார் 4194-4

4. உடையொடு நல்ல கீளும் ஒப்பு இல் கோவணமும் நெய்து 4195-1
விடையவர் அடியார் வந்து வேண்டும் மாறு ஈயும் ஆற்றால் 4195-2
இடை அறாது அளித்து நாளும் அவர் கழல் இறைஞ்சி ஏத்தி 4195-3
அடை உறு நலத்தர் ஆகி அரன் அடி நீழல் சேர்ந்தார் 4195-4

5. கற்றை வேணி முடியார் தம் கழல் சேர்வதற்குக் கலந்த வினை 4196-1
செற்ற நேசர் கழல் வணங்கிச் சிறப்பால் முன்னைப் பிறப்பு உணர்ந்து 4196-2
பெற்றம் உயர்த்தார்க்கு ஆலயங்கள் பெருக அமைத்து மண் ஆண்ட 4196-3
கொற்ற வேந்தர் கோச்செம் கண் சோழர் பெருமை கூறுவாம் 4196-4

## 68 கோச்செங்கட் சோழ நாயனார் புராணம்

1. துலையில் புறவின் நிறை அளித்த சோழர் உரிமைச் சோணாட்டில் 4197-1
அலையில் தரளம் அகில் ஒடுசந்து அணி நீர்ப் பொன்னி மணி கொழிக்கும் 4197-2
குலையில் பெருகும் சந்திரத் தீர்த்தத்தின் மருங்கு குளிர் சோலை 4197-3
நிலையில் பெருகும் தரு மிடைந்த நெடும் தண் கானம் ஒன்று உளது ஆல் 4197-4

2. அப் பூம் கானில் வெண் நாவல் அதன் கீழ் முன் நாள் அரிதேடும் 4198-1
மெய்ப் பூங்கழலார் வெளிப்படலும் மிக்க தவத்தோர் வெள்ளானை 4198-2
கைப்பூம் புனலும் முகந்து ஆட்டிக் கமழ் பூம் கொத்தும் அணிந்து இறைஞ்சி 4198-3
மைப்பூம் குவளைக் களத்தாரை நாளும் வழிபட்டு ஒழுகும் ஆல் 4198-4

3. ஆன செயலால் திருவானைக்கா என்று அதற்குப் பெயர் ஆக 4199-1
ஞானம் உடைய ஒரு சிலந்தி நம்பர் செம் பொன் திருமுடிமேல் 4199-2
கானல் விரவும் சருகு உதிரா வண்ணம் கலந்த வாய் நூலால் 4199-3
மேல் நல்திரு மேற்கட்டி என விரிந்து செறியப் புரிந்து உளதால் 4199-4

4. நன்றும் இழைத்த சிலம்பி வலைப் பரப்பை நாதன் அடி வணங்க 4200-1
சென்ற யானை அநுசிதம் என்று அதனைச் சிதைக்கச் சிலம்பிதான் 4200-2
இன்று களிற்றின் கரம் சுலவிற்று என்று மீள இழைத்தது அதனை 4200-3
அன்று கழித்த பிற்றைநாள் அடல் வெள் யானை அழித்ததால் 4200-4

5. எம்பிரான் தன் மேனியின் மேல் சருகு விழாமையான் வருந்தி 4201-1
உம்பர் இழைத்த நூல் வலயம் அழிப்பதே என்று உறுத்து எழுந்து 4201-2
வெம்பிச் சிலம்பி துதிக்கையினில் புக்குக் கடிப்ப வேகத்தால் 4201-3
கும்ப யானை கை நிலத்தில் மோதிக் குலைந்து வீழ்ந்தது ஆல் 4201-4

6. தறையில் புடைப்பக் கைப்புக்க சிலம்பி தானும் உயிர் நீங்க 4202-1
மறையில் பொருளும் தரும் ஆற்றான் மத யானைக்கும் வரம் கொடுத்து 4202-2
முறையில் சிலபி தனைச் சோழர் குலத்து வந்து முன் உதித்து 4202-3
நிறையில் புவனம் காத்து அளிக்க அருள் செய்து அருள நிலத்தின் கண் 4202-4

7. தொன்மை தரு சோழர் குலத்து அரசன் ஆம் சுபதேவன் 4203-1
தன்னுடைய பெரும் தேவி கமலவதி உடன் சார்ந்து 4203-2
மன்னு புகழத் திருத்தில்லை மன்று ஆடும் மலர்ப் பாதம் 4203-3
சென்னி உறப் பணிந்து ஏத்தித் திருப்படிக் கீழ் வழிபடு நாள் 4203-4

8. மக்கள் பேறு இன்மையினால் மாதேவி வரம் வேண்டச் 4204-1
செக்கர் நெடும் சடைக் கூத்தர் திரு உள்ளம் செய்தலினால் 4204-2
மிக்க திருப்பணி செய்த சிலம்பிகுல வேந்து மகிழ் 4204-3

அக் கமலவதி வயிற்றில் அணி மகவாய் வந்து அடைய 4204-4

9. கழையார் தோளி கமலவதி தன்பால் கருப்ப நாள் நிரம்பி 4205-1
விழைவு ஆர் மகவு பெற அடுத்த வேலை அதனில் காலம் உணர் 4205-2
பழையார் ஒரு நாழிகை கழித்துப் பிறக்கு மேல் இப் பசும் குழவி 4205-3
உழையார் புவனம் ஒரு மூன்றும் அளிக்கும் என் ஒள் இழையார் 4205-4

10. பிறவா ஒரு நாழிகை கழித்து என் பிள்ளை பிறக்கும் பரிசு என் கால் 4206-1
உற ஆர்த்து எடுத்துத் தூக்கும் என உற்ற செயல் மற்று அது முற்றி 4206-2
அறவாணர்கள் சொல்லிய காலம் அணைய பிணிவிட்டு அருமணியை 4206-3
இறவாது ஒழிவாள் பெற்று எடுத்து என் கோச்செம் கண்ணனோ என்றாள் 4206-4

11. தேவி புதல்வர் பெற்று இறக்க செம் கோல் சோழன் சுபதேவன் 4207-1
ஆவி அனைய அரும் புதல்வன் தன்னை வளர்த்து அங்கு மணி மகுடம் 4207-2
மேவும் உரிமை முடி கவித்துத் தானும் விரும்பு பெரும் தவத்தின் 4207-3
தாவுஇல் நெறியைச் சென்று அடைந்து தலைவர் சிவலோகம் சார்ந்தான் 4207-4

12. கோதை வேலர் கோச்செம் கண் சோழர் தாம் இக் குவலயத்தில் 4208-1
ஆதிமூர்த்தி அருளால் முன் அறிந்து பிறந்து மண் ஆள்வார் 4208-2
பூதநாதன் தான் மகிழ்ந்து பொருந்தும் பெரும் தண் சிவ ஆலயங்கள் 4208-3
காதலோடும் பல எடுக்கும் தொண்டு புரியும் கடன் பூண்டார் 4208-4

13. ஆனைக் காவில் தாம் முன்னம் அருள் பெற்று அதனை அறிந்து அங்கு 4209-1
மானைத் தரித்த திருக்கரத்தார் மகிழும் கோயில் செய்கின்றார் 4209-2
ஞானச் சார்வாம் வெண்நாவல் உடனே கூட நலம் சிறக்க 4209-3
பால் நல் களத்துத்தம் பெருமான் அமரும் கோயில் பணி சமைத்தார் 4209-4

14. மந்திரிகள் தமை ஏவி வள்ளல் கொடை அனபாயன் 4210-1
முந்தை வரும் குல முதலோர் ஆய முதல் செம்கணார் 4210-2
அந்தம் இல் சீர்ச் சோனாட்டில் அகன் ஆடு தொறும் அணியார் 4210-3
சந்திர சேகரன் அமரும் தானங்கள் பல சமைத்தார் 4210-4

15. அக் கோயில் தொறும் சிவனுக்கு அமுதுபடி முதலான 4211-1
மிக்க பெரும் செல்வங்கள் விருப்பினால் மிக அமைத்துத் 4211-2
திக்கு அனைத்தும் தனிச் செங்கோல் முறை நிறுத்தித் தேர் வேந்தர் 4211-3
முக்கண் முதல் நடம் ஆடும் முதல் தில்லை உன்னினார் 4211-4

16. திரு ஆர்ந்த செம்பொன்னின் அம்பலத்தே நடம் செய்யும் 4212-1
பெருமானை அடிவணங்கி பேர் அன்பு தலை சிறப்ப 4212-2
உருகா நின்று உளம் களிப்பத் தொழுது ஏத்தி உறையும் நாள் 4212-3
வருவாய்மை மறையவர்க்கு மாளிகைகள் பல சமைத்தார் 4212-4

17. தேவர் பிரான் திருத்தொண்டில் கோச் செங்கட் செம்பியர் கோன் 4213-1
பூவலயம் பொது நீக்கி ஆண்டு அருளிப் புவனியின் மேல் 4213-2
ஏவிய நல்தொண்டு புரிந்து இமையவர்கள் அடி போற்ற 4213-3
மேவினார் திருத்தில்லை வேந்தர் திருவடி நிழல் கீழ் 4213-4

18. கருநீல மிடற்றார் செய்ய கழலடி நீழல் சேர 4214-1
வருநீர்மை உடைய செம் கட் சோழர் தம் மலர்த்தாள் வாழ்த்தித் 4214-2
தருநீர்மை இசை கொள் யாழின் தலைவராய் உலகம் ஏத்தும் 4214-3
திருநீல கண்டப் பாணர் திறம் இனிச் செப்பல் உற்றேன் 4214-4

## 69 திருநீலகண்ட யாழ்ப்பாண நாயனார் புராணம்

1. எருக்கத்தம் புலியூர் மன்னி வாழ்பவர் இறைவன் தன் சீர் 4215-1
திருத்தகும் யாழில் இட்டுப் பரவுவார் செழும் சோணாட்டில் 4215-2
விருப்பு உறு தானம் எல்லாம் பணிந்து போய் விளங்கும் கூடல் 4215-3
பருப்பதச் சிலையார் மன்னும் ஆலவாய் பணியச் சென்றார் 4215-4

2. ஆலவாய் அமர்ந்தார் கோயில் வாயிலை அடைந்து நின்று 4216-1
பாலை ஈர் ஏழு கோத்த பண்ணினில் கருவி வீக்கிக் 4216-2
காலம் ஆதரித்த பண்ணில் கை பல முறையும் ஆராய்ந்து 4216-3
ஏவலார் குழலாள் பாகர் பாணிகள் யாழில் இட்டார் 4216-4

3. மற்று அவர் கருவிப் பாடல் மதுரை நீடு ஆலவாயில் 4217-1
கொற்றவன் திருள்ளத்துக் கொண்டு தன் தொண்டர்க்கு எல்லாம் 4217-2
அற்றைநாள் கனவில் ஏவ அருள் பெரும் பாணனாரைத் 4217-3
தெற்றினார் புரங்கள் செற்றார் திரு முன்பு கொண்டு புக்கார் 4217-4

4. அன்பர்கள் கொண்டு புக்க பொழுதினில் அரிவை பாகன் 4218-1
தன் பெரும் பணிஆம் என்று தமக்கு மெய் உணர்தல் ஆலே 4218-2
மன் பெரும் பாணனாரும் மா மறை பாட வல்லார் 4218-3
முன்பு இருந்து யாழில் கூடல் முதல்வரைப் பாடுகின்றார் 4218-4

5. திரிபுரம் எரித்த வாறும் தேர்மிசை நின்ற வாறும் 4219-1
கரியினை உரித்த வாறும் காமனைக் காய்ந்தவாறும் 4219-2
அரி அயற்கு அரிய வாரும் அடியவர்க்கு எளிய வாறும் 4219-3
பரிவினால் பாடக் கேட்டுப் பரமனார் அருளினாலே 4219-4

6. அந்தரத்து எழுந்த ஓசை அன்பினில் பாணர் பாடும் 4220-1
சந்தம் யாழ் தரையில் சீதம் தாக்கில் வீக்கி அழியும் என்று 4220-2
சுந்தரப் பலகை முன் நீர் இடும் எனத் தொண்டர் இட்டார் 4220-3
செம்தமிழ் பாணனாரும் திரு அருள் பெற்றுச் சேர்ந்தார் 4220-4

7. தமனியப் பலகை ஏறித் தந்திரிக் கருவி வாசித்து 4221-1
உமை ஒரு பாகர் வண்மை உலகு எலாம் அறிய ஏத்தி 4221-2
இமையவர் போற்ற ஏகி எண் இல் தானங்கள் கும்பிட்டு 4221-3
அமரர் நாடு ஆளாது ஆரூர் ஆண்டவர் ஆரூர் சேர்ந்தார் 4221-4

8. கோயில் வாயில் முன் அடைந்து கூற்றம் செற்ற பெரும் திறலும் 4222-1
தாயின் நல்ல பெரும் கருணை அடியார்க்கு அளிக்கும் தண் அளியும் 4222-2
ஏயும் கருவியில் தொடுத்து அங்கு இட்டுப் பாடக் கேட்டு அம்கண் 4222-3
வாயில் வேறு வடதிசையில் வகுப்பப் புகுந்து வணங்கினார் 4222-4

9. மூலத் தானத்து எழுந்து அருளி இருந்த முதல்வன் தனை வணங்கிச் 4223-1
சாலக் காலம் அங்கு இருந்து தம்பிரான் தன் திரு அருளால் 4223-2
சீலத்தார்கள் பிரியாத திருவாரூரின் நின்றும் போய் 4223-3
ஆலத்து ஆர்ந்த கண்டத்தார் அமரும் தானம் பல வணங்கி 4223-4

10. ஆழி சூழும் திருத் தோணி அமர்ந்த அம்மான் அருளாலே 4224-1
யாழின் மொழியாள் உமை ஞானம் ஊட்ட உண்ட எம்பெருமான் 4224-2
காழி நாடன் கவுணியர் கோன் கமல பாதம் வணங்குதற்கு 4224-3
வாழி மறையோர் புகலியினில் வந்தார் சந்த இசைப்பாணர் 4224-4

11. ஞானம் உண்டார் கேட்டு அருளி நல்ல இசை யாழ்ப் பெரும் பாணர்க்கு 4225-1
ஆன படியால் சிறப்பு அருளி அமரும் நாளில் அவர் பாடும் 4225-2
மேன்மை பதிகத்து இசை யாழில் இடப் பெற்று உடனே மேயபின் 4225-3
பால் நல் களத்தார் பெருமணித்தில் உடனே பரமர் தாள் அடைந்தார் 4225-4

12. வரும் பான்மையினில் பெரும் பாணர் மலர்த்தாள் வணங்கி வயல் சாலிக் 4226-1
கரும்பு ஆர் கழனித் திருநாவலூரில் சைவக் கலை மறையோர் 4226-2
அரும்பா நின்ற அணி நிலவும் பணியும் அணிந்தார் அருள் பெற்ற 4226-3
சுரும்பு ஆர் தொங்கல் சடையனார் பெருமை சொல்லல் உறுகின்றோம் 4226-4

1. தம்பிரானைத் தோழமை கொண்டு அருளித் தமது தடம் புயம் சேர் 4227-1
கொம்பனார் பால் ஒரு தூது செல்ல ஏவிக் கொண்டு அருளும் 4227-2
எம்பிரானைச் சேரமான் பெருமாள் இணைஈல் துணைவராம் 4227-3
நம்பி ஆரூரைப் பயந்தார் ஞாலம் எல்லாம் குடிவாழ 4227-4

71 இசை ஞானியார் புராணம்
1. ஒழியாப் பெருமைச் சடையனார் உரிமைச் செல்வத் திருமனையார் 4228-1
அழியாப் புரங்கள் எய்து அழித்தார் ஆண்ட நம்பி தனைப் பயந்தார் 4228-2
இழியாக் குலத்தின் இசைஞானிப் பிராட்டி யாரை என் சிறுபுன் 4228-3
மொழியால் புகழ முடியுமோ முடியாது எவர்க்கும் முடியாது ஆல் 4228-4

---

This file was last revised on 08 May 2004

---

See Also:
1. Stories of the nAyanmAr in English with Pictures

Back to periya purANam Page
Back to thirumuRai Page
Back to Shaiva Sidhdhantha Home Page